**வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை - 2024**

------------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, தேசியசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் அதிகாரசபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு தேசியசபையிற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை

மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் பிரிவு 8(1) மற்றும் 2021 நவம்பர் 16 திகதிய அரச தொழில் முயற்சிகள் நிறுவனங்களின் நிறுவனம்சார் கட்டுப்பாடு தொடர்பான வழிகாட்டல் மற்றும் கைநூல் | நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் பாதீட்டுக்காக அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் பாதீட்டிற்கான அங்கீகாரம் 02 மாத கால தாமத்தின் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 2024 ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டம், பெறுகைத் திட்டம் மற்றும் பாதீடு அமைச்சுச் செயலாளரின் அறிவுரையின் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு 2024 பெப்ரவரி 22 திகதி செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. 2026 ஆண்டிற்காக அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் | நிதி அதிகாரச் சட்டம் மற்றும் உரிய வழிகாட்டல்களின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | தாமதமின்றி பெற்றுக்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் பின்னிணைப்பு 502(2)II மற்றும் 1978 திசெம்பர் 19 திகதிய 842 இலக்கம் கொண்ட திறைசேரி சுற்றறிக்கை | 2024 திசெம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்டிருந்த சொத்துக்களின் மீள்மதிப்பீட்டின் போது ரூபா 5,561,348 இற்காக மீள்மதிப்பீடு செய்திருந்த போதிலும், சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துகளின் பதிவேடு நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீள்மதிப்பீடு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களை உட்படுத்தி உரிய முறையில் நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக பதிவு செய்து பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக பேணிச் செல்ல வேண்டும். |
| (இ) | 2021 நவம்பர் 16 திகதிய அரச தொழில் முயற்சிகளின் நிறுவனம்சார் கட்டுப்பாடு தொடர்பான வழிகாட்டல் | | | |
| | பந்தி 2.3 | 2022 முதல் 2024 வரையான மூன்றாண்டிற்கான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், தொடர்ந்தும் அடுத்த 05 ஆண்டுகளுக்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2026 ஆண்டிற்காக உரிய வழிகாட்டலின் படி கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிப்பதற்கு மற்றும் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | உரிய வழிகாட்டல்களின் படி கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2017 ஜூன் 28 திகதிய 01/2017 இலக்கம் கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் ரூபா 5.6 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் நிதியமைச்சின் கொம்டிரோலர் ஜெனரால் அலுவலகத்தின் அரச சொத்துக்கள் தொடர்பான மையப்படுத்தப்பட்ட தரவு முறைமைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் சொத்துக்கள் குறிப்பிட்ட சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி நிதியமைச்சின் கொம்டிரோலர் ஜெனரால் அலுவலகத்தின் அரச சொத்துக்கள் தொடர்பான மையப்படுத்தப்பட்ட தரவு முறைமைக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 109,945,502 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 132,698,295 தொகையாக காணப்பட்டது. அதன்படி, நிதி விளைவுகளில் ரூபா 22,752,793 இற்கான பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இந்த பின்னடைவிற்கு முதலீட்டு வருமானம் ரூபா 38,200,010 தொகையினால் குறைவடைதல் பிரதான காரணமாக இருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 திசெம்பர் 12 திகதிய பாராளுமன்ற விஷேட குழுவின் பாராளுமன்ற வெளியீட்டு தொகுதி இலக்கம் 351 இன் பிரிவு 10.6 இன் படி நாட்டின் பாதைகளின் பாதுகாப்பு மிகவும் சிறந்த முறையில் முகாமைத்துவப் படுத்துவதற்காக இந்த நிறுவனம் தேசிய ஆணைக்குழு ஒன்றாக நியமனம் செய்யப்பட்டு அதற்கு தேவையான அதிகாரங்கள் மற்றும் ஆற்றல் நிதி வளங்கள் வழங்குதல் ஆணைக்குழுவின் அலுவல்களுக்கு உதவுவதற்காக உயர் தகைமைகளையுடைய பயிற்சி பெற்ற பதவியணியொன்றை கொண்ட முழுமையான செயலகம் ஒன்று நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபை, போக்குவரத்துப் பாதுகாப்பு ஆணைக்குழு என நிறுவும் அலுவல்கள் இதுவரை பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன், இதற்கான சட்ட வரைபு இறுதியாக 2025 ஆண்டு அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | போக்குவரத்து பாதுகாப்பு ஆணைக்குழு உரிய அங்கீகாரத்தின் கீழ் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ''அனைவருக்கும் பாதுகாப்பான வீதி முறைமையொன்று'' என்ற தொனிப்பொருளின் கீழ் தேசிய பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் 11 எதிர்பார்த்த கருமங்கள் குறிப்பிடப்பட்ட போதிலும், இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் வாகனங்கள் விபத்துக்கள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி கடந்த ஐந்து ஆண்டுகளில் ஏற்பட்டிருந்த ஒட்டுமொத்த வாகன விபத்துக்களின் எண்ணிக்கை 116,167 | விதி விபத்துக்களை குறைத்தல் மற்றும் பாதை பாதுகாப்பு தொடர்பாக இலங்கை பல்வேறு அரச மற்றும் அரச மயமல்லாத நிறுவனங்கள் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றதெனவும், வீதி விபத்துக்கள் அதிகரிப்பதற்கான பல்வேறு காரணங்கள் தாக்கத்தை ஏற்பட்டிருந்ததெனவும், வீதிப் பாதுகாப்பு தொடர்பாக | முக்கியத்துவ தேவைப்பாடுகளை இனங்கண்டு வீதிப் பாதுகாப்பு முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்கள் நாடு பூராகவும் பரவலாக செயற்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகை எனவும், அதன் மூலம் 12,149 இற்கு அண்மித்த எண்ணிக்கையான ஆட்கள் இறந்திருந்தனர் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. அதேபோல், கடந்த மூன்று ஆண்டுகளில் சபையினால் வீதிப் பாதுகாப்பு முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ரூபா 64,500,752 இற்கான செலவொன்று மேற்கொண்டிருந்த போதிலும், வீதி விபத்துக்களின் எண்ணிக்கையில் குறைவொன்று ஏற்பட்டிருக்கவில்லை. | பொறுப்புச் சொல்ல வேண்டிய நிறுவனங்களுக்கு தாக்கத்தை ஏற்படுத்துதல், ஒழுங்குறுத்தலுக்கான அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றென இந்த சபை நிறுவப்பட்டிருக்கவிலலை எனவும், எவ்வாறாயினும் வீதிப் பாதுகாப்பு தொடர்பாக இலங்கைக்கு நீண்ட கால நலன்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய முறையில் எதிர் காலத்தில் பொருத்தமான செய்முறைசார் நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்படுகின்றதென அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | மோதிய பின்னர் தப்பியோடிய விபத்துக்கள் காரணமாக தவிக்க விடப்பட்ட நபர்களுக்கான நட்டஈடு வழங்குவது தொடர்பாக கடந்த ஐந்து ஆண்டுகளில் மோதிவிட்டு தப்பியோடிய விபத்துக்கள் 1,169 விபத்துக்களில் நட்டஈடு பெற்றுக்கொள்வதற்காக சபைக்கு 247 விண்ணப்பங்கள் மாத்திரம் சமர்பிக்கப்பட்டிருந்து. இந்த மோதிவிட்டு தப்பிச் செல்லும் சந்தர்ப்பங்களில் அதற்காக நட்டஈடு பெற்றுக்கொள்வதற்கான இயலுமை தொடர்பாக பொதுமக்களை அறிவுறுத்துவதற்காக போதியளவு நடவடிக்கை எடுத்திருக்காமை, இந்த நட்டஈடு கோறிக்கைகள் குறைவடைவதற்கு காரணமாக இருந்தது. | மோதிவிட்டு தப்பியோடிய வாகன விபத்துக்களின் தவிப்படைந்த ஆட்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்ட போதிலும், அனைத்து பாதிக்கப்பட்டவர்களும் சபையிலிருந்து நிதியுதவி விண்ணப்படுவதில்லை. இது தொடர்பாக பொது மக்களை அறிவுறுத்தும் படி இலங்கை பொலிஸின் பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், பொதுமக்களை அறிவுறுத்துவதற்கு இந்த ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | மோதிவிட்டு தப்பிச்செல்லும் விபத்துக்கள் தொடர்பான நட்டஈடுகள் பெற்றுக்கொள்ளும் இயலுமை தொடர்பாக பொது மக்களை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு உட்பட மூன்று வருடங்களினுள் சபைக்கு காப்புறுதி நிறுவனங்களில் இருந்து கிடைத்திருந்த ரூபா 222,674,418 இற்கான வருமானத்தில் நிதியுதவி வழங்கும் அலுவல்களுக்காக மற்றும் வீதி பாதுகாப்பு முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 100,450,751 தொகை அதாவது சபையின் வருமானத்தின் 45 சதவீதமாக காணப்பட்டது. நிறுவனம் நிறுவப்பட்ட பணிப்பொறுப்பை நிறைவேற்றுவதற்காக தகைமையுடைய செயற்திறனான | 1998 இன் 05 ஆம் இலக்க மோட்டார் வாகன (திருத்தம்) சட்டத்தின் 213(ஆ) இன் 04 இன் மூலம் வீதிப் பாதுகாப்பு நிதியத்தின் செய்பணிகள் காட்டப்பட்டுள்ளது. கடந்த 02 வருடங்களினுள் அத்தியசியமான பதவிகளில் அடிக்கடி வெற்றிடங்கள் ஏற்படுவதனால் சில திட்டமிடப்பட்ட செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு தாமதம் ஏற்பட்டது. எதிர் காலத்தில் | நிறுவனத்தின் நிறுவப்பட்ட செய்பணி நிறைவேற்றக்கூடியவாறு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அவற்றை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை வீதிப் பாதுகாப்பு மற்றும் நிதிசார் சலுகைகள் வழங்கல் செலவுகள் குறைவதற்கு காரணமாக இருந்தது. | நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்டு குறிப்பிட்ட கால சட்டகத்தினுள் செயற்படுத்தி நிறுவனத்தின் ஆக்கபூர்வ தன்மை மற்றும் செயற்திறனை அதிகரிப்பதற்காக எதிர்பார்க்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது. | |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் செயலாளர் பதவி, 04 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் பதவியொன்று, அலுவலக உதவியாளர் பதவியொன்று, 02 சாரதிப் பதவிகள், செயற்பாட்டு உத்தியோகத்தர் பதியொன்றாக 06 பதவிகளுக்குரிய 10 பதவியணியினருக்காக முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரம் ஒன்றின்றி போக்குவரத்து அமைச்சு மற்றும் புகையிரத திணைக்களத்தின் பதவியணியினர் சபைக்கு இணைக்கப்பட்டிருந்தனர். | சபைக்காக 05 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கும் சந்தர்ப்பத்தில் அமைச்சில் மற்றும் புகையிரத திணைக்களத்திலிருந்து இணைக்கப்பட்டிருந்த 10 அபிவிருத்தி உத்தியோகத்தர் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஒருவர், இரண்டு சாரதிகள் மற்றும் அலுவலக உதவியாளர் ஒருவர் கடமையில் ஈடுபட்டிருந்த போதிலும், இதுவரை மேற்கூறிய அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்காக நிரந்தரப் பதவியணியொன்று நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்காக நிரந்தர அடிப்படையில் பதவியணி ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 திகதி அரச தொழில் முயற்சிகளுக்கான தாபனம் சார் கட்டுபாடுகள் தொடர்பான வழிகாட்டல்களில் பந்தி 2.2.1 பிரகாரம் நிறுவனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக தேசிய கொள்கை சட்டகம் ஒன்றினுள் முக்கியத்துவ அடிப்படையில் கூட்டிணைந்த திட்டமொன்றினூடாக மூலோபாய போக்கினை தயாரிப்பதற்கும் அதன் மூலம் விளக்கமளிக்கப்பட்டுள்ள பிரதான செயலாற்றுகை சுட்டிகள் (KPI) செயற்படுத்தப்படுகின்றதென உறுதிப்படுத்துவதற்கும், மூலோபாய | இந்த தேசிய சபையின் திட்டங்களை செயற்படுத்தும் போது அவ்வப்போது நிறுவனத்தின் முகாமைத்துவத்தில் ஏற்பட்டிருந்த வெற்றிடங்கள் காரணமாக 2024 ஆண்டில் எதிர்பார்த்த செயலாற்றுகையை நெருங்குவதற்கு முடியாமல் இருந்ததெனவும் மற்றும் 2022 – 2024 கூட்டிணைந்த திட்டம் சிறந்த கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தியிருக்கவில்லை எனவும், உறுதிப்படுத்துவதுடன், | சுற்றறிக்கைகள் மற்றும் வழிகாட்டல்களின் படி செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| திட்டத்தை செயற்படுத்துவதற்காக தொடர்ச்சியாக மீளாய்வு மேற்கொண்டு தேவையான அனைத்து சந்தர்ப்பங்களிலும் சரி செய்வதற்கான அனைத்து நடவடிக்கை எடுத்தல் நிறுவன முகாமைத்துவத்தின் பொறுப்பாக காணப்பட்ட போதிலும், 2022 – 2024 மூன்று ஆண்டு கூட்டிணைந்த திட்டத்தின் முன்னேற்றம் முகாமைத்துவத்தினால் கால ரீதியாக மீளாய்வு செய்வதற்கு அல்லது நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதேபோல், 2025 ஆண்டு முதல் அடுத்து 05 ஆண்டு காலப் பகுதிக்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் இவ்வாறான சிக்கல்கள் ஏற்படுவதை தவிர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | |

## 4.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் வீதிப் பாதுகாப்பு ஒத்துழைப்பு தொடர்பான நுழைவை அடிப்படையாகக் கொண்டு 32 செயற்திட்டங்கள் செயற்படுத்துவதற்கு ரூபா 476.1 மில்லியனிற்கான பாதீட்டு ஏற்பாடுகளுடன் 2022 – 2024 மூன்றாண்டு கூட்டிணைந்த திட்டம் சபையினால் தயாரிக்கப்பட்டிருந்தது. கூட்டிணைந்த திட்டத்தில் அடங்கியிருந்த 16 செயற்திட்டங்கள் அந்த காலப் பகுதிக்காக செயலாற்றுகை திட்டங்களில் உட்படுத்தி செயற்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்திருக்காததுடன், ஏனைய 16 திட்டங்களின் செயலாற்றுகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 0 முதல் 81 சதவீதம் வரையான பெறுமதியொன்றினை மாத்திரம் கொண்டிருந்தது. அதேபோல் இந்த மூன்றாண்டு திட்டத்தை இனங்கண்டிருக்காத ரூபா 82 மில்லியன் பெறுமதியான 33 செயற்திட்டங்கள் கூட்டிணைந்த திட்டத்தை திருத்தாமல் அந்தக் காலப் பகுதிக்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. அதேபோல், 2024 ஆண்டில் செயல் | ஐக்கிய நாடுகளின் வீதிப் பாதுகாப்பு ஒத்துழைப்பினால் உத்தேச 05 தூண்களின் நுழைவின் கீழ் செயற்படுதல் கட்டாயமாக இல்லாத போதிலும், அங்கத்துவ நாடென்ற வகையில் அந்த நுழைவினை செயற்பாட்டு ரீதியாக செயற்படுத்துதல் விபத்துக்களை குறைப்பதற்கு காரணமாக இருந்ததென இனங்கண்டிருந்தமையால் இலங்கையில் வீதிப் பாதுகாப்பு தொடர்பாக செயற்படுவதற்கு நிறுவப்பட்டிருந்த பொறுப்பு வாய்ந்த அரச நிறுவனம் ஒன்றென இந்த நுழைவின் கீழ் நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிடப்படுகின்றதெனவும் மற்றும் அனைத்துத் தூண்களும் அடங்கக்கூடியவாறு நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரிக்கபடாமைக்கு இந்த தேசிய சபையில் காணப்படுகின்ற சட்ட நிலைமை மற்றும் வரையறுக்கப்பட்ட வளங்களின் எண்ணிக்கை தாக்கத்தை ஏற்படுத்துகின்றதென அறிவிக்கப்படுகின்றது. | நிறுவனத்தின் குறிக்கோளை நிறைவேற்றக் கொள்ளக்கூடியவாறு மூலோபாய நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு செயற்படுத்த வேண்டும். |

நடவடிக்கைத் திட்டத்தில் 29 செயற்திட்டங்களின் கீழ் 93 நிகழ்ச்சித் திட்டங்கள் இனங்கண்டிருந்ததுடன், 2024 ஜூன் மாதத்தில் அதனை மீண்டும் திருத்தம் மேற்கொண்டு 14 செயற்திட்டங்களின் கீழ் 37 நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ரூபா 149 மில்லியன் தொகை மதிப்பீடொன்றிற்காக செயற்படுத்துதவற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அவற்றில் 11 செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், அவற்றின் செயலாற்றுகை 0 முதல் 25 சதவீதமான பெறுமதியொன்றை மாத்திரம் கொண்டிருந்தது.

## 4.3 பாதீட்டுக் காட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் சபையின் மூலதனச் செலவு மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 233,597,000 தொகையாக காணப்பட்டதுடன், உள்ளவாறான செலவு ரூபா 5,692,193 தொகை அதாவது 2 சதவீதமாக காணப்பட்டமையால் சபையினால் தமது கருமங்களை நிறைவேற்றும் போது செயற்திறனுடன் நிதியங்களை பயன்படுத்துவதற்கு பாதீடு சிறந்த கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.<br>அதேபோல், மூலதனச் செலவுகள் குறைவாக பயன்படுத்தல் சபையின் குறிக்கோள்கள் மற்றும் செய்பணிகள் நிறைவேற்றும் போது மிகவும் பலவீன மட்டமொன்று ஏற்படுத்துவதற்கும் வீதி விபத்துக்களை குறைத்துக்கொள்வதற்கும் முடியாமைக்கான காரணமாக இருந்தது. | 2025 ஆண்டின் போது பாதீடு சிறந்த கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | நிறுவனம் சார் பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றும் போது பாதீடு சிறந்த கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்த வேண்டும். |